தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 பிப்ரவரி 19, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்."

தாம் நன்கு கற்ற கருத்துகளை அவையோர் மனதில் பதியுமாறு பேசுவதில் வல்லவர்கள், கற்றவர்கள் அனைவரையும்விட சிறந்த கல்வி அறிவுடையவராக மதிக்கப்படுவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

அணைத் திட்டம்

***51278—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் அப்பர்-அமராவதி அணைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் 30 மெகா வாட் திறன்கொண்ட அப்பர்-அமராவதி மின் திட்டத்தைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால், இத்திட்டத்திற்கு வனச் சரணாலய நிலம் மற்றும் வன நிலம் சுமார் 600 ஏக்கருக்குக் குறையாமல் தேவைப்பட்டது. வனத் துறையின் அனுமதி கிடைக்கப்பெறாததால், அப்பர்-அமராவதி மின் திட்டம் 1980 ஆம் ஆண்டே கைவிடப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், கழகத்தினுடைய நிரந்தரப் பொதுச் செயலாளர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மூத்த குடிமக்கள் கட்டணமில்லாப் பயணம் செய்யலாம் என்று அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது, அந்தத் திட்டத்திற்கு வனத் துறையின் அனுமதி பெற வேண்டுமென்று கூறினார்கள். திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் அமராவதி அணை உள்ளது. அணையின் மொத்த உயரம் 90 அடி, கொள்ளளவு 4,035 மில்லியன் கன அடியாகும். கேரள மாநிலம் பழையாறு, பம்பா ஆறு, தேனாறு ஆகிய 3 ஆறுகள் சேரும் கூட்டாறு என்னுமிடத்தில் உருவாகி, அமராவதி அணைக்கு நீர்வரத்து கிடைக்கிறது. இந்த நீர், துவானம் என்னும் பகுதியில் சுமார் 50 மீட்டர் உயரத்தில் நீர் அருவி போன்று கீழே

2016 பிப்ரவரி 19]

விழுகிறது. ஆண்டுதோறும் வடகிழக்கு மற்றும் தென்மேற்குப் பருவமழைகளின்போது அணைக்கு வரும் உபரி நீர் அப்படியே வெளியேற்றப்படும் நடைமுறை கடந்த 50 ஆண்டுகாலமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதனால், பல டி.எம்.சி. அடி தண்ணீரானது வீணாகிறது. 1965 ஆம் ஆண்டு அப்பர்-அமராவதி அணை கட்ட மத்திய, மாநில அரசு அளவிலான உயர்மட்டப் பொறியாளர்கள் ஆய்வுப் பணி மேற்கொண்டு, 30 மெகா வாட் மின் உற்பத்தி செய்ய வேண்டுமெனவும், இத்திட்டத்தின்மூலம் ஆண்டுதோறும் வீணாகும் சுமார் 5 டி.எம்.சி. அடி தண்ணீரை சேமித்து, மின் உற்பத்தி செய்ய முடியும் எனவும் மத்திய, மாநில அரசுகள் அறிக்கை அளித்துள்ளன. எனவே, அமராவதி அணைக்கு வரும் உபரி நீரைச் சேமித்து வைத்தால், முறையாக விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்தவும், குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும் பயனுள்ளதாக அமையும். மேலும், திருப்பூர், ஈரோடு, கரூர் மாவட்ட விவசாயிகள் இதனால் பெரிதும் பயனடைவார்கள். எனவே, மத்திய, மாநில அரசுகள்மூலம் வனத் துறையின் அனுமதியைப் பெற்று, இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச்சென்று, நடவடிக்கை எடுப்பார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பர்-அமராவதி அணைத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், அப்பகுதி மக்களுக்கு என்னென்ன பயன்கள் கிடைக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். உள்ளபடியே அது நல்ல திட்டம்தான். அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தேவைகள் மற்றும் விவசாயத் தேவைகள், மின்சார உற்பத்தி போன்ற பன்முகத் தேவைகளுக்குப் பயன்படக்கூடிய அந்தத் திட்டம் மிக நல்ல திட்டம். ஆனால், 1980-லேயே அதற்கான ஆய்வுகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன. தேவைப்படும் அனைத்து இடங்களும் வனத் துறைக்குச் சொந்தமான இடங்களாக இருப்பதுதான் பிரச்சினையாக இருக்கிறது. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்த நிலம் வனச் சரணாலயப் பகுதி நிலமாக

உள்ளது. வனத் துறையினுடைய நிலம் என்பது வேறு, வனச் சரணாலய நிலம் என்பது வேறு. வனச் சரணாலய நிலமாக இருப்பதால், அதிலிருந்து எந்த காரணத்திற்காகவும் சிறிதளவு நிலம்கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவேதான், பயனுள்ள திட்டமாக இருந்தாலும், விதிமுறைப்படி, சட்டப்படி அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-05

அதேபோல 600 ஏக்கர் என்பது பெரிய அளவிலான இடம். இதையொட்டியுள்ள வேறு பகுதியில் மாற்று இடத்தை ஆய்வு செய்தாலும், மாற்று இடமும் வனத் துறைக்குச் சொந்தமான பகுதியாகத்தான் இருக்கிறது. ஆகவேதான், அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசு, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று மீண்டும் முயற்சி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அம்மா அவர்கள் மூலமாக மத்திய அரசைத் தொடர்பு கொண்டு, அப்பர்-அமராவதி திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வனத் துறையிடம் சிறப்பு அனுமதி பெற முடியுமா என்பதைப் பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிந்தித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று அதை முறைப்படுத்துவதற்கு உரிய வழிமுறைகளைச் செய்யலாம் என்று கூறினார்கள். நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால்தான் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாராலும் அதை நடைமுறைப்படுத்த முடியாது. நீண்டகாலமாக இருக்கக்கூடிய

2016 பிப்ரவரி 19]

இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அந்த வனப் பகுதியிலே இருக்கக்கூடிய 18 செட்டில்மென்ட் பகுதிகளில் மின்சாரம் இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்றதன்மூலம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக தற்போது சோலார் லைட் பொருத்துவதற்கு டெண்டர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும் அந்தப் பகுதி மக்களுக்கு மின் வசதியை துரிதமாக ஏற்படுத்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது* Thick Forest. *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அந்தப் பகுதி அடர்ந்த வனப் பகுதியாக இருப்பதால், நேரடியாக மின் நிலையம் அமைப்பதில் சில பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனாலும்கூட, அந்தப் பகுதியில் இருக்கிறவர்களுக்கு சூரிய ஒளி மின்சக்தி மூலமாக* solar energy *விளக்குகள் அமைப்பதற்கு தேவையான முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவாக எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் மூலமாக மத்திய அரசைத் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பதற்கான தொடர் முயற்சிகளையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக நாட்டில் எந்த அரசியல் கட்சிகளும் செய்திராத இமாலய*

சாதனையாக, 2011 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் கொடுத்த அனைத்து வாக்குறுதிகளையும் ஒன்று விடாமல் நிறைவேற்றி, எஞ்சியிருந்த முதியோருக்கான இலவச பேருந்துப் பயணம் குறித்த வாக்குறுதியையும் (மேசையைத் தட்டும் ஒலி) நேற்றையதினம் விதி 110-ன்கீழ் நிறைவேற்றிக் காட்டி வரலாற்றுச் சாதனை படைத்து, நூற்றுக்கு நூறு சதவீதம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றியதன்மூலம், வரப் போகும் சட்டமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்தமாக 234 தொகுதிகளிலும் வெற்றி என்கிற இமாலய சாதனையைப் படைக்க இருக்கிறார் மனிதப் புனிதவதி இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 24 ஆம் தேதி வர இருக்கிற மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனிதப் பிறந்த நாளுக்கு என்னுடைய பணிவன்பான நல்வாழ்த்துகளை அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களில் உரித்தாக்குகிறேன். தமிழகத்தை மின்வெட்டே இல்லாத மாநிலமாக மாற்றியதோடு, மின் மிகை மாநிலமாகவும் மாற்றிக் காட்டிய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, புதியதாக ஏதேனும் நீர் மின் நிலையங்களை எதிர்காலத்தில் அமைக்கும் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டே அப்பர்-அமராவதி நீர் மின் திட்டம் கைவிடப்பட்டிருந்தாலுங்கூட, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே பல்வேறு புதிய நீர் மின் திட்டங்களையெல்லாம் செயல்படுத்தி, இன்றைக்கு உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தமுள்ள 8 நீர் மின் திட்டங்கள் மூலமாக 103 மெகா வாட் அளவுக்கு இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே புதியதாக மின்சார நிறுவு திறன் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். நீர்மின் திட்டங்களை உருவாக்குவது என்பது மிகவும் சிரமமானது. அந்தச் சிரமமான பணியையும்கூட இன்றைக்கு வெற்றிகரமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2016 பிப்ரவரி 19]

அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, இந்த 4¾ ஆண்டிலே, மொத்தம் 8 திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களுடைய விரிவாக்கம் பவானி கட்டளை கதவணை 2, பவானி கட்டளை கதவணை 3, பவானி கட்டளை கதவணை 1, பெரியாறு-வைகை திட்டம் 2, பெரியாறு-வைகை திட்டம் 3, பெரியாறு-வைகை திட்டம் 4 மற்றும் பெரியாறு யூனிட் 2, பெரியாறு யூனிட் 3. பெரியாறு நீர்மின் திட்டத்தின்மூலம் உற்பத்தித் திறனை மேம்படுத்தியதிலே மின்சார நிறுவு திறன் 42 மெகா வாட். மொத்தத்தில் 103 மெகா வாட் அளவிற்கு நீர்மின் திட்டத்திலே மின்சார நிறுவு திறன் புதியதாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

இதோடுமட்டுமல்லாமல், நீர்மின் திட்டங்களில் முக்கியமான திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்பு விதி 110-ன்கீழ் அறிவித்திருந்தார்கள். குந்தா நீரேற்று மின் திட்டம் 4x125 என கிட்டத்தட்ட 500 மெகா வாட் உற்பத்திக்கான திட்டத்தை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அறிவித்த அந்தத் திட்டப் பணிகள் 1,831 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். குந்தா நீரேற்று மின் திட்டம் என்பது உச்சபட்ச மின் தேவையான நேரத்திலே மிகவும் முக்கியமான திட்டமாக உள்ளது. ஆகவே, அந்தத் திட்டத்தை அம்மா அவர்கள் அறிவித்ததோடு நின்றுவிடாமல் அதைச் செயல்படுத்திக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக, அணுகுச் சுரங்கங்கள் தோண்டுகின்ற பணி முடிவடைந்திருக்கிறது, இதர கட்டமைப்புப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குந்தா நீரேற்று மின் திட்டம் மட்டுமல்ல, மாண்புமிகு அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்த சில்லஹல்லா நீரேற்று புனல்மின் திட்டத்திலும் கிட்டத்தட்ட 4 யூனிட் என்ற வீதத்தில்

[2016 பிப்ரவரி 19

ஒரு யூனிட் என்பது 500 மெகா வாட் என்ற அளவிலே 2,000 மெகா வாட் அளவிற்கான மின் உற்பத்தித் திட்டமும் இன்றைக்கு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை அம்மா அவர்கள் விதி 110-ன்கீழ் அறிவித்தபோதே இந்தத் திட்டம் முடிவடைய 7 ஆண்டுகள் ஆகும் என்று தெரிவித்திருக்கிறார்கள். 2,000 மெகா வாட் அளவுள்ள அந்த சில்லஹல்லா நீரேற்று புனல்மின் திட்டத்தின் பணிகள் விரைவாக, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்தத் திட்டமும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகவே நிச்சயம் செயல்பாட்டுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீர்மின் திட்டங்களுக்கு அனுமதி பெறுவதே மிகப் பெரிய விஷயம். ஆனால், அந்த அனுமதியைப் பெற்று, இப்போது பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அப்பர்-அமராவதி அணைத் திட்டம் கைவிடப்பட்டிருந்தாலும், அதற்குப் பதிலாக மாற்றுத் திட்டங்களாக இவ்வளவு பெரிய திட்டங்களை இன்றைக்கு அம்மா அவர்கள் உருவாக்கி, அத்துணைப் பணிகளும் புயல் வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். 103 மெகா வாட் என்ற அளவில் உற்பத்தியைத் தொடங்கி 2,000 மெகா வாட் அளவிற்கு உற்பத்திக்கான வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதேபோல, பல்வேறு திட்டங்களையும் அம்மா அவர்களின் அரசு விரைவாக தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தளவில் எல்லாவகையான உற்பத்தித் திறனையும் முழுமையாகப் பயன்படுத்தியிருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான். அது நீர்மின் திட்டங்களாக இருந்தாலும் சரி, அனல்மின் திட்டங்களாக இருந்தாலும் சரி அல்லது எரிவாயு (Gas) மூலமாக மின் உற்பத்தி செய்கின்ற திட்டங்களானாலும் சரி, இணைமின் உற்பத்தித் திட்டங்களானாலும் சரி, சூரிய மின்சக்தித் திட்டங்களாக இருந்தாலும் சரி, எல்லாவகையான மின் உற்பத்தித் திட்டங்களின் வழிமுறைகள் அத்துணையையும் கையாண்டு அத்துணைப்

2016 பிப்ரவரி 19]

பகுதிகளிலும் இன்றைக்கு மின் திட்டங்களை அறிவித்து உற்பத்தி தொடங்கப்பட்டிருக்கிறது. உற்பத்தியைத் தொடங்குகின்ற நிலைக்கு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சில திட்டங்களை செயல்படுத்தியிருந்தாலும்கூட, சில திட்டங்கள் தொடர்ந்து இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் 2016 ஆம் ஆண்டில் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும்போது (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டங்களும், தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் திட்டங்களும் விரைவாக முடிக்கப்பட்டு அம்மா அவர்களின் திருக்கரங்களாலேயே அந்தத் திட்டங்கள் அனைத்தையும் துவங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கோதையாறு நீர்மின் திட்டம்* second phase *சரியாக இயங்கவில்லை, இப்போது பழுதடைந்திருக்கிறது. இது நீண்டகாலப் பிரச்சினை. அதைச் சரிசெய்து, நவீனப்படுத்தி இயக்கினால் மின்சாரம் அதிகமாகக் கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு மின் திட்டம் பற்றி விரிவான பதிலை ஏற்கெனவே இங்கே அளித்திருக்கிறேன். அது பல்வேறு கட்டங்களிலே ஆய்வு நிலையிலே உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிவடைந்த பின்பு, அந்த அறிக்கையின் அடிப்படையிலே உரிய விவரங்கள் பின்னால் உங்களுக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2016 பிப்ரவரி 19

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிக்கையில் சொன்னதை 100 சதவிகிதம் நிறைவேற்றி சாதனை புரிந்த தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஹைவேவிஸ் மலைப் பகுதியில் நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன. ஹைவேவிஸ் எஸ்டேட்டில் ஒரு நீர்த்தேக்கம், இரவங்கலாரில் ஒரு நீர்த்தேக்கம், இரண்டுக்கும் இடையில் 7, 8 நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன. இவற்றில் தண்ணீர் எப்போதுமே நிரம்பி இருக்கும். இரவங்கலார் எஸ்டேட் மற்றும் சுருளித் தீர்த்தத்தின் வழியாக தண்ணீர் வந்து முல்லைப் பெரியாறில் இணைகின்றது. அந்த நீரை கீழேயுள்ள கூத்தனாச்சி ஆற்றுக்கு இறக்கினால் மின்சாரம் எடுப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். மின்சார வாரியத்தின் மூலமாக அந்த நீரைக் கீழே இறக்குவதற்குண்டான ஆய்வு சமீபத்தில் நடைபெற்றது. அதைத் துரிதப்படுத்தி, அந்த நீரை tunnel மூலமாக கீழே இறக்கி நீரைத் தேக்கினால் கீழ்ப் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதோடு, மின்சாரமும் கிடைக்கும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையை வழங்கியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு